பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 6·00

சுடர் 11 வள்ளுவர் ஆண்டு 2027 புரட்டாதி 28 திங்கட்கிழமை (14-10-1996) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 240

# பாதுகாப்புச் செலவு இவ்வருடத்தில் ரூ.5 ஆயிரம் கோடியை தாண்டியது!

## தேவையான முழு வசதிகளையும் படைகளுக்கு வழங்க அரசு முயற்சி

கொழும்பு, ஒக்ரோபர் 14

இந்த வருடத்துக்கான அரசின் பாதுகாப்புச் செலவு ஐயாயிரம் கோடி ரூபாவைத் தாண்டியிருக்கின்றது.

முப்படையினருக்கும் பொலீஸாருக்கும் தேவையான அனைத்து ஆயுதங்கள், யுத்த தளபாடங்கள் மற்றும் வசதிகளை வழங்கும் முயற்சியில் அரச உயர்பீடம் தீவிரமாக இருப்பதாக கொழும்புச் செய்திகள் தெரிவித்தன.

1995 இற்குரிய வரவு செலவுத் திட்டம் மூலம் 3 ஆயிரத்து 400 கோடி ரூபா கடந்த ஆண்டில் பாதுகாப்புச் செலவுகளுக்கு வழங்கப்பட்டது. எனினும் பின்னர் குறைநிரப்புப் பிரேரணை மூலம் நானூறு கோடி ரூபா கடந்த வருடத்தில் பாதுகாப்புச் செலவுக்கு வழங்கப்பட்டது.

இந்த வருடத்தில் —

கடந்த வாரம் குறை நிரப்புப் பிரேரணை மூலம் வழங்கப்பட்ட ஆயிரத்து அறுபது கோடி ரூபாவுடன் சேர்த்து பாதுகாப்புச் செலவினம் ஐயாயிரம் கோடி ரூபாவை எட்டியிருக்கின்றது.

தற்போது மேலதிகமாக ஒதுக்கப்பட்டுள்ள ஆயிரத்து அறுபது கோடி ரூபாவில் படைகள் மற்றும் பிரிவுகளுக்கு செலவிடப்படும்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## காணாமற்போன உரும்பிராய் யுவதி அழுகிய நிலையில் சடலமாக மீட்பு!

### மருத்துவ சோதனைக்காக கொழும்புக்கு

யாழ்ப்பாணம், ஒக். 14

கடந்த மாதம் முப்பதாம் திகதி காணாமற் போனதாகக் கருதப்பட்ட ஓர் இளம் பெண்ணின் சடலம், மிகவும் அழுகிய நிலையில் சடலமாக மீட்கப்பட்டுளளது.

கோண்டாவில் பகுதியில் உள்ள ஒரு வீட்டின் மலசல கூடத்திற்குப் பின்னால் புதைக்கப்பட்டிருந்த சடலமே தற்போது மீட்கப்பட்டதாகச் சொல்லப்படுகிறது.

உரும்பிராயில் வசித்த வெற்றிவேலாயுதம் ரஜனி (வயது 24) என்பவரின் சடலமே மீட்கப்பட்டது.

அவரின் சடலம் பிரேத பரிசோதனைக்காகவும், மரண விசாரணைக்காகவும் பொலீஸாரால் யாழ். பெரியாஸ்பத்திரியில் நேற்று ஒப்படைக்கப்பட்டது.

சடலம் மிகவும் அழுகிய நிலையில் இருந்தபடியால், இங்கு பிரேத பரிசோதனை செய்யமுடியாது எனக் கருதப்பட்டதால் அது நேற்று மாலையில் கொழும்புக்கு

(6 ஆம் பக்கம் பார்க்க)

## குடாநாட்டில் சிறைச்சாலை நிறுவ பொலீஸார் இடம் தேடுகின்றனர்

யாழ்ப்பாண மாவட்டத்தில் சிறைச்சாலை ஒன்றை அமைக்க பொலீஸார் முயற்சி எடுத்துள்ளதாகத் தெரிய வருகிறது.

பொலீஸ் மா அதிபர் டபிள்யு. பி. ராஜகுரு, யாழ். அரச அதிபரிடம், சிறைச்சாலை ஒன்றை இங்கு அமைக்க உதவுமாறு கேட்டுள்ளார்.

சிறைச்சாலையாக இயங்கக் கூடிய வகையில் வீடுகளை தெரிவு செய்தால், அவற்றை எடுத்துத்தர தாம் உதவ முடியும் என்றும்—

சிறைச்சாலையை அமைக்கக்கூடிய தனிக்கட்டடம் எதுவும் வசதியாக இல்லை என்றும் —

அரச அதிபர் பொலீஸ் மா அதிபருக்கு அறியப்படுத்தியுள்ளார்.

இதனை அடுத்து பொலீஸ் பகுதியினர், சிறைச்சாலை அமைப்பதற்கான வீடுகளை குடாநாட்டில் தேடி வருவதாக அறியவந்தது. (அ-3)

## சர்வதேச தொலைபேசிச் சேவை வடக்கிற்கு வழங்க ரத்வத்தை பணிப்பு

யாழ்ப்பாணம், ஒக். 14

யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்பு செல்வோரின் எண்ணிக்கையைக் குறைப்பதற்காக —

இங்கு சர்வதேச தொலைபேசித் தொடர்பு சேவையை ஆரம்பிக்க ஏதுவாக அதற்குரிய சாதனங்களை நிறுவவும் —

வெளிநாடுகளில் இருந்து இங்குள்ள வங்கிகள் மூலம் பணம் பெறுவதற்கான வசதிகளைச் செய்யவும் —

உடனடியாக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் எனச் சொல்லப்படுகிறது.

பலாலியில் அண்மையில் நடைபெற்ற உயர்மட்ட மகாநாட்டில் இந்த வசதிகளைச் செய்யுமாறு சம்பந்தப்பட்ட தரப்பினர்களுக்குப் பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் உத்தரவிட்டார்.

வெளிநாடுகளில் உள்ள தமது உறவினர்களுடன் தொடர்பு கொள்ளும் வாய்ப்பு நீண்ட காலமாக யாழ்ப்பாண மக்களுக்கு இருக்கவில்லை.

இதனால் அவர்களுடன் ... பெரும்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## இராணுவ உயரதிகாரிகள் பலருக்கு இடமாற்றம்

மணிலா, ஒக். 14

இலங்கை இராணுவத்தலைமையில் பல மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளதாக இராணுவ அதிகாரிகள் நேற்று கொழும்பு நகரில் தெரிவித்திருக்கின்றனர்.

இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் சரத் முனசிங்க மட்டக்களப்பு பிரிகேட் கொமாண்டராக மாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

தலைநகர் கொழும்பில் பாதுகாப்பு அதிகாரியாகவிருக்கும் மேஜர் ஜெனரல் அசோகா ஜெயவர்த்தனா புலிகளின் எதிர்ப்பு நடவடிக்கை மேலாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

ஏழு மேஜர் ஜெனரல்களும், ஒன்பது பிரிகேடியர்களும் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளதாகவும் அறிவிக்கப்படுகிறது (உ-3)

## கொழும்பில் தொலைபேசி ஒற்றுக் கேட்கப்படுகின்றது!

கொழும்பு, ஒக். 14

கொழும்பில் பல்வேறு முக்கிய நபர்களின் தொலைபேசி உரையாடல்கள் ஒற்றுக் கேட்கப்படுவதாக கொழும்புப் பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டிருக்கிறது.

பத்திரிகையாளர்கள் மற்றும் முக்கிய எதிர்க்கட்சிப் பிரமுகர்களின் தொலைபேசிகள் தேசியப் புலனாய்வுப் பிரிவினால் ஒற்றுக் கேட்கப்படுவது கடந்த ஜூலையில் அம்பலத்துக்கு வந்தது.

தற்போது—

தாங்கள் பத்திரிகைகளுக்கும், மனித உரிமை மற்றும் அமைப்புகளுக்கும் வழங்கும் தகவல்களை கண்காணிப்பதற்காக தங்களின் வீடு மற்றும் அலுவலகங்களில் உள்ள தொலைபேசிகள் ஒற்றுக் கேட்கப்படுவதாக சர்வதேச தொண்டர் நிறுவனப் பிரதிநிதிகள் கூறுகின்றனர்.

பிரான்ஸிலிருந்து கொள்வனவு செய்யப்பட்ட — உயர் தொழில்நுட்பத் திறன் கொண்ட — கருவியைப் பயன்படுத்தி தொலைபேசி ஒற்றுக் கேட்கும் நடவடிக்கை

(6 ஆம் பக்கம் பார்க்க)

## கொழும்பு செல்வோர் திரும்பி வருவதில்லை!

கொழும்பு ஒக். 14

கடந்த ஏப்ரலிற்குப் பின் வடமராட்சி, தென்மராட்சிப் பகுதியிலிருந்து மக்கள் மீண்டும் வலிகாமத்துக்கு வந்த பின்னர் —

இங்கிருந்து கொழும்பு மற்றும் தெற்கின் பிறபகுதிகளுக்குச் சென்ற பொது மக்களில் 90 சதவீதமானோர் மீண்டும் குடா நாட்டுக்குத் திரும்பவில்லையாம்.

அரசு திரட்டியுள்ள புள்ளி விவரங்களிலிருந்து இவ் விடயம் தெரியவந்ததாக மூத்த அதிகாரி ஒருவர் குறிப்பிட்டார்.

அரசு வழங்கும் கப்பல் மற்றும் விமான வசதிகளைப் பயன்படுத்தி கொழும்பு செல்லும் குடாநாட்டு மக்களில் கணிசமானோர் அங்கிருந்து வெளிநாடுகளுக்குச் சென்று விடுகின்றனர்; அல்லது குடும்பத்துடன் கொழும்புப் பகுதியில் நிரந்தரமாகத் தங்கி விடுகின்றனர்.

இவ்வாறு அரசு தனது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## சென்னை மேயர் பதவி: கருணாநிதியின் மகனுக்கு?

சென்னை, ஒக். 14

தமிழகத்தில் நடைபெற்று முடிந்த உள்ளாட்சி மன்றத் தேர்தல்களின் வாக்குகளை எண்ணும் வேலைகள் இன்று ஆரம்பமாகவிருக்கின்றன, இன்று மாலை அளவில் முடிவுகள் வெளிவரத்தொடங்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

மாநிலத் தலைநகர் சென்னையில் மாநகராட்சி மன்றத்தை திராவிட முன்னேற்றக் கழகம் — தமிழ் மாநில காங்கிரஸ் கூட்டணி கைப்பற்றும் என்று தேர்தல் ஆருடங்கள் தெரிவிக்கின்றன.

சென்னை மேயர் தேர்தலில் தி.மு.க. வேட்பாளரும் முதல்வர் கருணாநிதியின் மகனுமான ஸ்டாலின் வெற்றிபெறுவார் என எதிர்பார்க்கப்படுகின்றது.

அ.தி.மு.க. ஆதரவுடன் போட்டியிடும் — சுப்பிரமணியசுவாமியின் ஜனதாக் கட்சியைச் சேர்ந்த — பெண்

(6 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உடுவில் மகளிர் கல்லூரி

உடுவில்

### முன்பள்ளி ஆசிரியர் பயிற்சி நெறி

முன்பள்ளி ஆசிரியர்களுக்கான பயிற்சி நெறிகள் ஆரம்பமாகின்றன.

**16 – 10 – 1996** புதன் மு.ப. 9.00 மணி (பழைய நேரம்)

விவரங்களுக்கு அலுவலகத்துடன் தொடர்பு கொள்ளவும்.

அதிபர்

(சி/3283)

## உடுவில் மகளிர் கல்லூரி

உடுவில்

பேராதனை — யாழ்ப்பாணப் பல்கலைக் கழகப் பட்டப் படிப்புகள் ஆரம்பமாகின்றன.

**G.A.Q. யாழ்ப்பாணம்**
**G.A.Q. பேராதனை**
**B.A. பேராதனை**

ஆரம்பம்: **14-10-1996**
பிற்பகல் 3-00 மணி (பழைய நேரம்)

★ முன் கூட்டியே அனுமதிகளைப் பெற்றுக் கொள்ளவும்.

அதிபர்

(சி/3285)

## உடுவில் மகளிர் கல்லூரி

உடுவில்

### க.பொ.த. (உயர்தர)ப் பரீட்சை

எடுத்தவர்களுக்கான

### பயிற்சி வகுப்புகள் ஆரம்பம்

**14-10-1996** திங்கள்
முற்பகல் 9-00 மணிக்கு (பழைய நேரம்)
ஆரம்பமாகின்றன.

பாடநெறிகள்

1. ஆங்கில வகுப்புகள்
2. கணனி ,,
3. தட்டச்சு, சுருக்கெழுத்து

பதிவுகளுக்கு அலுவலகத்துடன் தொடர்பு கொள்ளவும்.

அதிபர்

(சி/3284)

## நீங்கள் ஏன் அதிக கட்டணம் செலுத்த வேண்டும்?

★ நம்பிக்கையான சேவைக்கு
★ நாணயமான சேவைக்கு

### கறுப்பு வெள்ளைப் படங்களுக்கு

## த ஸ்ருடியோவை

நாடுங்கள்.

★ நியாயமான கட்டணத்தில்
★ தரமான புகைப்படங்கள்

தேசிய அடையாள அட்டை ரூ. 35/- மட்டும்
விசேட அடையாள அட்டை ரூ 35/- மட்டும்
தபால் அ. அட்டை/பாஸ்போர்ட் ரூ. 75/-
$2\frac{1}{2}$ x 2 அளவுகள் மட்டும்.

ஒரு நாள் சேவை 75/- மட்டுமே
(3 பிரதிகள்)

பாடசாலை அதிபர்களின் கவனத்திற்கு:
பாடசாலை அடையாள அட்டைகளுக்கு
தங்கள் தங்கள் பாடசாலையிலேயே
படமெடுத்துத் தரப்படும்.

2 பிரதிகள் ரூபா 35/- மட்டும்.

யாழ்ப்பாணம், நல்லூர் உதவி அரச அதிபர் பிரிவுகளுக்கென அங்கீகரிக்கப்பட்ட ஒரேயொரு புகைப்பட நிலையம்.

## த ஸ்ருடியோ

பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
(சதோசவுக்கு அருகில்)

[43156]

# யாழ். மாவட்ட கால்நடைகளுக்கு செயற்கை முறைச் சினைப்படுத்தல்

## மிக விரைவில் மீண்டும் ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஒக். 14

யாழ். மாவட்டத்தில் கால்நடைகளுக்கான செயற்கை முறைச் சினைப்படுத்தல் சேவை மிக விரைவில் மீண்டும் ஆரம்பமாகவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதற்கான முன் ஏற்பாடுகளை கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களம் மேற்கொண்டு வருகின்றது.

அதி குளிரூட்டிய சுக்கிலம் மூலம் மேற் கொள்ளப்படும் செயற்கை முறைச் சினைப் படுத்தலுக்கான உபகரணங்கள், இறக்குமதி செய்யப்பட்ட நல்லின சுக்கிலங்கள் யாவும் யாழ்ப்பாணம் கொண்டுவரப் பட்டுள்ளன.

திருநெல்வேலியிலுள்ள கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களத்தின் செயற்கை முறைச் சினைப்படுத்தல் நிலையம் மூலமாக மேற்கொள்ளப்பட்டு வந்த குளிரூட்டிய சுக்கில விநியோகமும் மீண்டும் மேற்கொள்ளப்படுவதற்கான ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

இதன் இரு முறைகள் மூலம் தயாரிக்கப்படும் நல்லின சுக்கிலங்களைப் பயன்படுத்தி யாழ். மாவட்ட கால்நடை வைத்திய பிரிவுகள் தோறும் கால் நடைகளுக்கான செயற்கை முறைச் சினைப் படுத்தல் சேவை மேற்கொள்ளப்பட இருப்பதாக கால் நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களத்தின் வடக்கு உதவிப் பணிப்பாளர் திருமதி. ஜி. சிவபாதசுந்தரம் தெரிவித்துள்ளார்.

(இ-4)

## சமய சந்திகளில்

அபிராமியந்தாதி ஆய்வுரை வெளியீட்டு வரிசையில் அறுபத்தொன்பதாவது பாடல் தனம்தரும் கல்வி தரும் வெளியீடு இன்று நவராத்திரியை ஒட்டி மாலை வழக்கம்பரை அம்மன் கோவிலில் நடைபெறவுள்ளது. கோவில் குருக்கள் சிவத்திரு சு.சுந்தரராசக் குருக்கள் ஆய்வுரையை வெளியிட்டு வைப்பார்.

சகலகலாவல்லிமாலை பாடல்களும் சேர்த்து வெளியிடப்பட்டுள்ள இப் பிரசுரத்தை இலவசமாகப் பெற்றுக் கொள்ளலாம் என்று வழக்கம்பரை பஜனைச் சபையினர் தெரிவித்துள்ளனர்.

(அ-28)

## பிறப்புசான்றிதழ் பெற முடியாத நிலை

பிறப்புச் சான்றிதழ் வழங்கும் படிவம் தென்மராட்சிப் பிரதேசசெயலகத்துக்கு வந்து சேராததால் அப்பகுதியில் உள்ளவர்கள் அடையாள அட்டைக்கு விண்ணப்பிக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

1954ஆம் ஆண்டுக்குப் பின்னர் பிறந்தவர்கள்ளுக்கு வழங்கப்படும் பிறப்புச் சான்றிதழ் படிவம் யாழ். செயலகத்தில் இல்லாததால் பிரதேச செயலகத்துக்கு பிறப்புச் சான்றிதழுக்கு விண்ணப்பிக்க வருபவர்கள் ஏமாற்றத்துடன் திரும்புவதைக் காண முடிகிறது.

(இ-117)

## சங்கானை சண்டிலிப்பாயில் சடலங்கள்

சங்கானை, சண்டிலிப்பாய் பகுதிகளில் கடந்த வியாழக்கிழமை மாலை தனித்தனியாக இரு சடலங்கள் துப்பாக்கிச் சூட்டுக்காயங்களுடன் காணப்பட்டன.

அவற்றுக்கு அருகில் விடுதலைப் புலிகள் அமைப்பின் வாசகங்கள் கொண்ட நோட்டீஸ்கள் காணப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

தேசத் துரோக நடவடிக்கைகளுக்காக இந்த இருவருக்கும் மரணதண்டனை வழங்கப்பட்டதாக அதில் குறிப்பிடப்பட்டிருந்தாகவும் தெரிவிக்கப்பட்டது.

(உ-145)

## சங்கானைக்கு அலுவலர் பஸ் சேவை

சங்கானை, சண்டிலிப்பாய், உடுவில், தெல்லிப்பளை ஆகிய உதவி அரசாங்க அதிபர் பணிமனை அலுவலகர்களினதும், இப்பகுதி ஆசிரியர்களினதும் நலன்கருதி யாழ்ப்பாணத்திலிருந்து மருதனார் மடம், உடுவில், சண்டிலிப்பாய் வழியாக சங்கானை வரை மினிபஸ் சேவை எதிர்வரும் புதன்கிழமை தொடக்கம் நடைபெற உள்ளது. காலை 8.00 மணிக்கு யாழ் நகரிலிருந்து புறப்பட்டு சங்கானை செல்லும் இந்த பஸ் மாலை 3.00மணிக்கு சங்கானையிலிருந்து யாழ்ப்பாணம் புறப்படும்.

மேற்படி ஏற்பாடுகள் சங்கானை பதில் உதவி அரசாங்க அதிபர் திரு. சு.புத்தி சிகாமணியால் செய்யப்பட்டுள்ளது. (இ)

## கண்ணீர் அஞ்சலி

செல்வி

### இராஜேஸ்வரி அப்பாத்துரை

13-10-96 இல் காலஞ்சென்ற எமது பாடசாலை ஆசிரியை செல்வி இராஜேஸ்வரி அப்பாத்துரைக்குஎமது கண்ணீர் அஞ்சலிகளைத் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள்,
மாணவர்கள்,
பா. அ. சபை

யா/ அரியாலை ஸ்ரீபார்வதி வித்தியாசாலை
யாழ்ப்பாணம்.

(43180)

## மரண அறிவித்தல்கள்

செல்வி

### றஜினி வேலாயுதபிள்ளை

(பவா)

செல்வி றஜினி (பவா) வேலாயுதபிள்ளை 30.9.1996 ஆம் திகதி அகாலமரணமடைந்தார்.

அன்னார் வேலாயுதபிள்ளை—திலகவதி தம்பதியரின் மகளும், ரமணி (கனடா), ராகவன் (கனடா), ஸ்ரீதரன் (யா/கொக்குவில் இந்துக் கல்லூரி மாணவன்) ஆகியோரின் பாசமிகு சகோதரியும், லேகன் (கனடா) இன் மைத்துனியும், செல்வரத்தினம் (பிலிப்பர்), தனபாலசிங்கம் (கனடா) ஆகியோரின் மருமகளும், பரிமளத்தின் (கனடா) பெறாமகளும், சத்தியநாதன் (கனடா), காலஞ்சென்ற சிவநாதன், சிவசத்தியநாதன் (ஜேர்மனி), சிவகுமார் (கனடா), சிவகுமாரி (கனடா) ஆகியோரின் ஒன்றுவிட்ட சகோதரியுமாவார்.

தகவல்:
சு.செல்வரத்தினம்
(மாமன்)

உரும்பிராய் வடக்கு,
உரும்பிராய்.

(43178)

செல்வி

### இராஜேஸ்வரி அப்பாத்துரை

(ஆசிரியை, யாழ்/ அரியாலை ஸ்ரீபார்வதி வித்தியாசாலை யாழ்ப்பாணம்)

செல்வி இராஜேஸ்வரி அப்பாத்துரை (ஆசிரியை, யாழ்/ அரியாலை ஸ்ரீபார்வதி வித்தியாசாலை, யாழ்ப்பாணம்) 13-10-96 ஞாயிற்றுக் கிழமை காலமானார்.

இவர் காலஞ் சென்றவர்களான கணபதிப்பிள்ளை அப்பாத்துரை- கண்மணி ஆகியோரின் அன்புப் புதல்வியும், தையல்நாயகி, சின்னத்துரை (ஓய்வு பெற்ற முதலியார்), சதாசிவன் (இளி. ஓய்வு பெற்ற தபால் உத்தியோகத்தர்), குணவதி, இரத்தினசிங்கம் (ஓய்வு பெற்ற இ. போ. ச. உத்தியோகத்தர்), குணநாயகி, சண்முகநாதன் (முன்னாள் இலங்கைக் கடற்படை உத்தியோகத்தர்), வரதலட்சுமி, பத்மேஸ்வரன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரியும், ஆறுமுகம், நவமணி, கமலா, காலஞ்சென்ற புண்ணியசிங்கம், லோகநாயகி (நூலகர்), சண்முகசுந்தரம் (செட்டி, முன்னாள் இலங்கை மரக்கூட்டுத்தாபன உத்தியோகத்தர்), இலங்காதேவி குலேந்திரன், றஞ்சி ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (14- 10- 96) திங்கட்கிழமை காலை 11.00 மணியளவில் (பழைய நேரம்) இலக்கம் 21, கனகரெத்தினம் வீதி, அரியாலையில் உள்ள அவரது இல்லத்திலிருந்து தகனக் கிரியைகளுக்காக அரியாலை சித்துப்பாத்தி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

தகவல்:
க. ஆறுமுகம்
(மைத்துனர்)

(43179)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# டெங்குக் காய்ச்சலுக்கு
# டில்லியில் 153 பேர் பலி!

புதுடில்லி, ஒக். 14

புதுடில்லியில் டெங்குக் காய்ச்சல் வேகமாகப் பரவி வருகிறது.

டெங்குக் காய்ச்சல் காரணமாக 153 பேர் நேற்று வரை மரணம் அடைந்துள்ளனர் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் மட்டும் 200 பேர் வரை இந்த நோய் காரணமாக டில்லி மருத்துவமனைகளில் சேர்க்கப்பட்டனர்.

டில்லியிலும், டில்லியின் புறநகர்ப்பகுதிகளிலும் சுமார் 2,300 பேர் இந்த நோய் காரணமாக மருத்துவமனைகளில் சேர்க்கப்பட்டுள்ளனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

வீடு, வாசல்களைச் சூழ உள்ள நீர்த்தேக்கங்களிலேயே டெங்குக் காய்ச்சலைப் பரப்பும் நுளம்புகள் உற்பத்தியாகின்றன என்று கூறப்படுகிறது. (இ)

## பாரூக் அப்துல்லாவின் கட்சி ஆளுங்கூட்டணியில்இணைவு

புதுடில்லி, ஒக். 14

காஷ்மீர் முதலமைச்சர் பாரூக் அப்துல்லா தலைமையிலான தேசிய மாநாட்டுக் கடந்த வாரம் பிரதமர் தேவகௌடா தலைமையிலான ஐக்கிய முன்னணியுடன் முறைப்படி இணைந்து கொண்டது.

கடத்த வாரம் புதுடில்லியில் நடைபெற்ற ஐக்கிய முன்னணியின் வழிநடத்தும் குழுக் கூட்டத்தில் இதற்கான அங்கீகாரம் அளிக்கப்பட்டது.

தேசிய மாநாட்டுக் கட்சி ஐக்கிய முன்னணியில் சேர்வது அணிக்கு மேலும் வலுவூட்டும் என இந்தக் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது, (இ-10)

### கருச் சிதைவு செய்வோருக்கு

## மார்புப் புற்று நோய் அதிகரிக்கும் சாத்தியம்

வாஷிங்டன், ஒக். 14

கருச்சிதைவு செய்யும் பெண்களுக்கு மார்புப்புற்று நோய் ஏற்படும் சாத்தியம் அதிகமாக இருப்பதாக அண்மையில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வு ஒன்று தெரிவிக்கிறது.

புற்றுநோய் வருவதற்கான வாய்ப்பு ஏனைய பெண்களைவிட இவர்களுக்கு 33சத வீதம் அதிகமாக இருப்பதாக அந்த ஆய்வு கூறுகிறது.

மார்புப் புற்றுநோய் வந்த 26 ஆயிரம் பெண்களிடையேயும், புற்றுநோயற்ற 35 ஆயிரம் பெண்களிடையேயும் கடந்த ஆண்டுகளில் அமெரிக்காவில் நடத்தப்பட்ட ஆய்வுகளின்போது இது தெரியவந்தது. (இ-3)


பிரத்தியேக வகுப்புகள்

றக்கா வீதி, யாழ்ப்பாணம்.

( ஜோண் பொஸ்கோ முன்பாக )

**கணக்கியல் A/L 98**

ஆரம்பம்: **14 – 10 – 1996**

பி. ப. 4.15 – 5.15

குறிப்பு: ★ ஒரு பிரிவு மட்டுமே ஆரம்பிக்கப்படும்.

★ வரையறுக்கப்பட்ட மாணவர் மட்டுமே அனுமதிக்கப்படுவர்.


ஆசிரியர்: திரு. S. D. J சுதர்ஷன்

( ஏனைய விஞ்ஞான, கலை, வர்த்தக, ஆங்கில, சிங்கள வகுப்புகளும் நடைபெறுகின்றன )

(43158)


## 31-ம் நாள் நினைவஞ்சலி

மலர்வு: 03 — 02 — 1929



உதிர்வு: 14 — 09 — 1996

அமரர்

### முத்துத்தம்பி சபாரட்ணம்

(முன்னாள் வர்த்தகர், மாத்தறை)

14 - 09 - 96 வவுனியாவில் இயற்கை எய்திய எமது குடும்பத் தலைவரின் ஆத்மா சாந்தியடைய அனுதினமும் மஞ்சவனப்பதி முருகனை இறைஞ்சி நிற்கும்:

— குடும்பத்தினர்

நாகலிங்கம் வீதி,
கொக்குவில் மேற்கு,
கொக்குவில்.

## தேர்தல் கலவரத்தில் ஒருவர் பலி

சென்னை ஒக். 14

தமிழகத்தில் உள்ளூராட்சித் தேர்தல் களையடுத்து ஏற்பட்ட கலவரங்களில் திருவள்ளுவர் அருகே ராமன் சேரியில் தி.மு.க. தொண்டர் ஒருவர் கொல்லப்பட்டார்; ஐந்து பேர் காயமடைந்தனர்.

நிலைமை கட்டுப்பாட்டுக்குள் இருப்பதாக காவல்துறை தெரிவித்துள்ளது. (இ-3)

# உலக அரங்கில்

## நச்சுத் தன்மை கொண்ட தவளைகள்

வடமேற்கு கொலம்பியாவில் உள்ள புதிய இன வௌவால்கள், தவளைகள் நூற்றுக்கணக்கானமக்களைக் கொல்லக் கூடிய நச்சுத்தன்மையைக் கொண்டுள்ளன என்று விஞ்ஞானிகள் கண்டு பிடித்துள்ளனர். (இ)

## அங்கோலாவில் ஐ. நா. படை

அங்கோலாவில் நிலை கொண்டிருக்கும் ஐ. நா. அமைதிப் படையின் காலத்தை டிசம்பர் 11 ஆம் திகதி வரை ஐ. நா. பாதுகாப்புச் சபை நீடித்திருக்கிறது.

7 ஆயிரம் பேர் கொண்ட இந்தப்படை அங்கு தங்க அனுமதிக்கப்பட்ட காலம் எதிர்வரும் வெள்ளிக்கிழமை முடிவுக்கு வருகிறது.

இந்த இரு மாத நீடிப்பை ஐ. நா. தலைமைச் செயலர் டாக்டர் பூட்ரஸ்பூட்ரஸ் காலி பரிந்துரைத்துள்ளார்.

இந்தப் படையில் ஆயிரத்துக்கு மேற்பட்ட இந்தியர்கள் உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-3)

## ஆளும் கூட்டணி கவிழும் என்கிறார் அத்வானி

தேவகௌடா தலைமையிலானகூட்டணிஅரசாங்கம் நூலிழையில் ஊசலாடிக் கொண்டிருக்கிறது. இந்த ஆண்டு முடிவுக்குள் அது பதவியில் இருந்து இறக்கப்பட்டுவிடும்:

பாரதிய ஜனதாக்கட்சித் தலைவர் லால் கிருஷ்ணா அத்வானி மேற்கண்டவாறு கருத்துத் தெரிவித்துள்ளார்.

## சத்தீஸ் சர்மாவின் வீடு, பண்ணை சோதனை

புதுடில்லி, ஒக். 14

ஜே. எம். எம். கட்சி எம். பிக்களுக்கு லஞ்சம் கொடுக்கப்பட்டதான வழக்கையடுத்து முன்னாள் மத்திய அமைச்சர் கப்டன் சத்தீஸ் சர்மாவின் வீடும், பண்ணை இல்லமும் திடீர் சோதனைக்குள்ளாகின.

சி. பி. ஐ. அதிகாரிகள் குழு [illegible] (இ-3)

## ஜப்பானில் வாகன உற்பத்தி அதிகரிப்பு

ரோக்கியோ, ஒக். 13

ஜப்பானிய வாகனங்களின் விற்பனை இவ்வாண்டு 8 சதவீதத்தால் அதிகரித்துள்ளது.

கடந்த மாதத்தில் மாத்திரம் விற்கப்பட்ட வாகனங்களின் தொகை 5 இலட்சத்து 11 ஆயிரத்து 911ஆகும். இவற்றில் 3 இலட்சத்து 49 ஆயிரத்து 460 கார்களும், 1 இலட்சத்து 60 ஆயிரத்து 815 டிரக் வாகனங்களும், 1, 436 பஸ்களும் அடங்கி உள்ளன.

ஜப்பானில் அதிக வாகனங்களை ரொயோட்டோ மோட்டார் வாகன நிறுவனமே உற்பத்தி செய்கிறது. (இ-10)

### பூட்ரஸ் காலி விவகாரம்:

## அமெரிக்க நிலைப்பாட்டுக்கு தென் ஆபிரிக்கா எதிர்ப்பு

ஐ. நா பொதுச் செயலர் பதவிக்கு பூட்ரஸ் பூட்ரஸ் காலியை மீண்டும் நியமிக்க வேண்டும் என்ற விவகாரம் குறித்து அமெரிக்க வெளியுறவு அமைச்சர் வாரன் கிறிஸ்தோபருக்கும், தென் ஆபிரிக்க அதிபர் நெல்சன் மண்டேலாவுக்கும் இடையில் நடந்த பேச்சில் உடன்பாடு ஏற்படவில்லை என தெரிவிக்கப்பட்டது.

இந்த விடயம் குறித்து, தென் ஆபிரிக்கா சென்றிருந்த வாரன் கிறிஸ்தோபருக்கும், மண்டேலாவுக்கும் இடையில் 45 நிமிடம் பேச்சு நடந்ததாகவும்-

அமெரிக்காவின் நிர்ப்பந்தங்களுக்கு மண்டேலா பணியவில்லை என்றும்- தெரிவிக்கப்பட்டது.

பூட்ரஸ் பூட்ரஸ் காலி மீண்டும் ஐ. நா. பொதுச் செயலராக நியமிக்கப்பட வேண்டும் என்ற தெற்கு ஆபிரிக்க நாடுகளின் நிலைப்பாட்டுக்கு மண்டேலா முழு ஆதரவைத் தெரிவித்துள்ளார்.

## மேஜருக்கு தட்சர் ஆதரவு

எதிர்வரும் மே மாதம் பிரிட்டனில் நடைபெற உள்ள பொதுத்தேர்தலில் ஜோன் மேஜருக்கு ஆதரவாக தாம் பிரசாரம் செய்யப்போவதாக பிரிட்டனின் முன்னாள் கொன்சர் வேட்டிவ் பிரதமர் தட்சர் தெரிவித்துள்ளார். (இ)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி

திரு. திருமதி

### கணபதிப்பிள்ளை தம்பதிகள்

(இளைப்பாறிய ஆசிரிய தம்பதிகள்)

எமது அறிவாலயத்தில் கல்வி ஒளி பரப்பிய அணையாத ஆசிரிய தீபங்கள் இரண்டு (14-09-1996) இல் அமரத்துவமடைந்துவிட்டன. இல்லறத்தில், அறிவுப்புலத்தில் இணைபிரியா இச் சோடிகள், அன்றில் பறவைகள் போல் ஒன்று சேர்ந்தே தம் சிறகை விரித்துப் பறந்து போய்விட்டனவே

ஒரு சில மணி நேரத்துள்ளே!

ஒன்றிணைந்த தம்பதிகளின் ஆத்ம சாந்திக்காக இத்தினத்தில் பிரார்த்திக்கும்:

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்,
பாடசாலை அபி. சங்கம்,
பழைய மாணவர் சங்கம்.
யா/ கல்வியங்காடு இந்து தமிழ் கலவன் பாடசாலை.

(43176)

## 1-ம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்: 14 — 01 — 1925 [மலேசியா]



மறைவு: 25 — 09 — 1995 [இலங்கை]

அமரர்

### இராமலிங்கம் இரத்தினசிங்கம்

திதி: 14–10–1996

எங்கள் குடும்பத்தின் ஒளிவிளக்காய்த் திகழ்ந்து எம்மை அன்போடும், பண்போடும், பாசத்தோடும் வழி நடத்திய அன்புத் தெய்வம் அப்பாவே! ஆண்டு ஒன்று போனாலும் உங்கள் நினைவுகள் எங்கள் உயிருள்ளவரை மாறாது.

உங்கள் பிரிவால் துயருறும்:
மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

இ. சீலன் (மகன்)
''கூல்ட் கவுஸ்'',
டச் றோட்,
உடுவில்.

(43148)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

10. H.P. பெற்றர் என்ஜினுடன் கூடிய கிறைன்டிங் மில் செற், மற்றும் மொடல் இல: 7500 டெக் விற்பனைக்குண்டு. கே. குலசிங்கம், முருகன் மில், 238, கோவில் வீதி, யாழ்ப்பாணம். (43170)

## தவறிவிட்டது

தம்பிப்பிள்ளை மூர்த்தி ஆகிய எனது 582061858 V இலக்க அடையாள அட்டையும், தொழில் அட்டையும் ஆனைப்பந்தி— குருநகருக்கிடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் இல.58, பிறவுண் வீதி (நரிக்குண்டு முன்பாக), யாழ்ப்பாணம் அல்லது ஸ்பெசல் என்ஜினியர்ஸ், இல. 8A, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரியில் ஒப்படைக்கவும். (43165)

பொன்னம்பலம் மகாதேவனின் 670254330 V இலக்க அடையாள அட்டை திருநெல்வேலி - நல்லூர் - அரியாலைக்கு இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து ப. கணேஸ், பகவான் வீதி, கோண்டாவில் வடக்கு, கோண்டாவில் எனும் முகவரியில் ஒப்படைக்கவும். (43160)

## மணமகள் தேவை

அரசாங்கத்திலிருந்து விலகி தனியார் துறையில் பணியாற்றும் 50 வயது மதிக்கத்தக்க தோற்றமுடைய உத்தியோகத்தருக்கு பெண்தேவை. கல்வியறிவும், பண்பும், நல்லொழுக்கமும் உடையவராயும், சிவந்தநிற அழகுடையவராயும், சைவக் குருக்கள் பரம்பரையாகவோ அல்லது உயர்குல பரம்பரைச் சைவ-போசனகாரராகவோ இருத்தலோடு பொறுப்புக்களற்றவராயும் இருத்தல் வேண்டும். முழு விவரமும் முதற் கடிதத்தில். தொடர்பு: மே/பா இல. 540, உதயன் பணிமனை, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (43092)

பல நிறுவனங்களின் சொந்தக்காரர், கத்தோலிக்கமதம், 47 வயது, இளமைத் தோற்றம், தீயபழக்கங்கள் எதுவுமற்ற தாரம் இழந்த, இரண்டு பிள்ளைகளின் தந்தைக்கு வாழ்க்கைத் துணைவி தேவை. தாரம் இழந்தவர்களும், விவாகரத்துப் பெற்ற எந்தமதத்தினரும் விண்ணப்பிக்கலாம். தொடர்பு: மே/பா இல, 542, உதயன் பணிமனை, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (43157)

## அக்கரைச் சீமையில்

இந்திய நாவல்களைத் தொடர்ந்து வாசிக்க அலுப்படிக்கவில்லையா? அராலியூர் ந. சுந்தரம்பிள்ளையின் அக்கரைச் சீமையில் ஓர் இலங்கை - இங்கிலாந்து நாவல். விலையும் மலிவுதான். ரூபா 25. பூபாலசிங்கம் புத்தகசாலை. (43008)

## இசை வகுப்புகள்

ஓர்கன் (Organ), கிற்றார் (Guitar), புல்லாங்குழல் (Flute) வகுப்புகள் நடைபெறுகின்றன. காலம்: சனி, ஞாயிறு நாள்களில் காலை 7.00 மணி. முகவரி: புவனகிரி, அரசடி பிள்ளையார் கோவிலடி, ஸ்ரேசன் வீதி, கோண்டாவில். (42943)

## திருமண சேவை

துர்க்கா திருமண சேவை - மாயக்க பிள்ளையார் கோவிலடி, தம்பசிட்டியிலும், யாழ்ப்பாணம், நாவலர் வீதி-பிறவுண் றோட் சந்தியிலும் இயங்குகின்றது. திங்கள் சந்திக்கலாம். படத்துடனும், குறிப்புடனும் வரவும். (43110)

---

31ஆம் நாள்

# நினைவலைகள்

வலி. கிழக்கு (தெ. ப) ப நோ. கூட்டுறவுச் சங்கத்தின் (கட்டைப்பிராய்) 20 ஆம் கிளையின் செயலாளராக ஆரம்பகாலம் தொடக்கம் அதன் வளர்ச்சிக்கு அயராது உழைத்து சிவபதம் எய்திய மதிப்புக்குரிய

**அமரர் சிவகுரு கணபதிப்பிள்ளை**

அவர்களையும்

அதே தினம் சிவபதமடைந்த அன்னாரின் மனைவி

திருமதி

**கணபதிப்பிள்ளை நாகம்மா**

அவர்களையும்

இன்று (1996-10-14) நினைவு கூருகின்றோம். அன்னார் இருவரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

20ஆம் கிளை குழு உறுப்பினர்,
ஊழியர்கள்.

கட்டைப்பிராய்,
யாழ்ப்பாணம். (43177)

---

# நன்றி நவிலல்

எமது கனிஷ்ட புத்திரன்

**செல்வன் இ. ஜயசிவானந்தன்**

அவர்கள் 09-10-96 அன்று அகால மரணமடைந்த செய்தி கேட்டு எமக்கு நேரில் வந்து ஆறுதல் கூறியும், பத்திரிகை, அனுதாபக் கடிதங்கள் மூலம் ஆறுதல் கூறியும், அவரது இறுதிக்கிரியையிலே பங்கு பற்றிச் சிறப்பித்து புகழாரம் சாற்றியும், மலர்மாலை சூட்டியும் உரிய நேரத்திலே அவரது இறுதிக்கிரியைகள் சிறப்பாக நிறைவு பெற ஒத்துழைத்த கைதடி சித்த மருத்துவத்துறை, யாழ். பல்கலைக்கழகம், மற்றும் கல்வி இலாகா, கூட்டுத்தாபன அதிகாரிகள், விரிவுரையாளர்கள், மாணவர்கள், அதிபர்கள், ஆசிரியர்கள், மற்றும் உத்தியோகத்தர்கள் அனைவருக்கும் அத்தோடு யாழ். போதனா வைத்தியசாலையிலிருந்து அன்னாரது பூதவுடலை இலகுவாகவும், விரைவாகவும் வீடு கொண்டுவர உதவிய வைத்தியசாலை ஊழியர்கள், யாழ். போதனா வைத்திய சாலைப் பணிப்பாளர் சுகாதார சேவைப் பணிப்பாளர் ஆகியோருக்கும் மற்றும் அன்னாரது இறுதிச் சடங்கிலே பங்கு பற்றிய உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் எமது குடும்பத்தின் சார்பில் மனப்பூர்வமான நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இராசதுரை குடும்பத்தினர்.

எச்சாட்டி வைரவர் கோவிலடி,
சுதுமலை தெற்கு,
மானிப்பாய். (43173)

---

# 31-ம் நாள் நினைவஞ்சலி



| அன்னையின் மடியில்: | ஆண்டவன் அடியில்: |
|---|---|
| 09 — 10 — 1975 | 17 — 09 — 1996 |

செல்வி

**சுதந்தரி திருஞானசம்பந்தமூர்த்தி**

(சுகுந்தா)

அன்புடனும் பண்புடனும் உறவாடிய
உன் மலர் முகம் - எம்
நினைவுத் திரையில் என்றும் நிழலாடும்.

17 - 09 - 1996 ஆம் திகதி சிவபதமடைந்த எமது புத்திரியின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (14-10-1996) திங்கட்கிழமை காலை யாழ். வில்லூன்றி அந்தியேட்டி கிரியை மண்டபத்திலும், வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் எமது இல்லத்தில் (16-10-96) புதன்கிழமையும் நடைபெறும். இந்நிகழ்வுகளில் கலந்து கொள்ளுமாறு உறவினர், நண்பர்களை அன்புடன் அழைக்கின்றோம்.

பெற்றோர்:
சோ. திருஞானசம்பந்தமூர்த்தி,
தி. யோகராணி.

314, கோவில் வீதி,
நல்லூர். (43087)

---

குறுகிய கால

# பயிற்சி வகுப்புகள் ஆரம்பம்

கேக் ஐசிங், மாச்சீனி மலர்கள், முக ஒப்பனைகளும் தலை அலங்காரங்களும், பூக்கள் தயாரித்தலும் அலங்கரித்தலும், சமையற்கலை (Western and Eastern). தொடர்பு:

**YOGI**
**HOME SCIENCE ACADEMY**
(REGD. No: 16322)
75, அம்மன் றோட்,
(வண்ணை வீரமகாகாளி அம்மன் கோவில் முன்பாக)
யாழ்ப்பாணம். (43166)

---

90ஆம் நாள் நெஞ்சகலா

# நினைவலைகள்



**அமரர் இ. குணசிங்கம்**
(B. A. Dip. in Edu.)
(ஆசிரியர், கரவெட்டி விக்னேஸ்வரக் கல்லூரி)

| மண்ணில்: | விண்ணில்: |
|---|---|
| 10 – 02 – 1952 | 19 – 07 – 1996 |

நீரோடு உறவாகி நிறைவாகவோ
நெஞ்சோடு வளர்த்தோனை நினைந்தோடினீர்
வாராத உலகத்தை நீர்தேடிட
வளர்சோக உருவோடு நிலைமாறினோம்.
ஆரோடு நோவதோ அழுகின்றகண்
ஆறாகி வேகிறோம் என்செய்வமோ!
தார்மேவு சிவன்பாதம் தனைநாடினீர்
தருகின்றோம் கண்ணீரே காணிக்கையாய்.

அமரரின் அந்தியேட்டி (14 - 10 - 1996 காலை 7 மணி)யிலும், மதியபோசனத்திலும் கலந்து சிறப்பிக்க அழைக்கிறோம்.

மனைவி, மக்கள், பெற்றோர்.

கிழவி தோட்டம்,
கரவெட்டி (கிழக்கு). (சி/3280)

---

# 90-ம் நாள் நினைவஞ்சலி



| தோற்றம்: | மறைவு: |
|---|---|
| 10 — 02 — 1952 | 19 — 07 — 1996 |

**அமரர் இளையதம்பி குணசிங்கம்**
(ஆசியர், யாழ். விக்கினேஸ்வரக் கல்லூரி, கரவெட்டி)

கல்லூரிக் கருங்கலமாய் கவினுறும் வண்ணம்
கனிந்த மொழியமிழ்தால் கல்வி அளித்தவனே,
கல்வி உலகின் கலங்கரை விளக்கே,
மண்ணுலகை விட்டு மறைந்திடினும் - எம்
மனங்களில் அன்புருவாய் ஒளிர்ந்திடுவீர்.

அதிபர், ஆசிரியர்கள்,
மாணவர்கள், ஊழியர்கள்.

ஆசிரியர் நலன்புரிச் சங்கம்,
யா/ விக்கினேஸ்வரக் கல்லூரி,
கரவெட்டி. (சி/3281)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**உதயன்**

## சாத்தியமற்றது

இன நெருக்கடிக்குத் தீர்வு காண்பதற்கான முயற்சியாக, தமிழீழ விடுதலைப் புலிகளுடன் பேச்சு வார்த்தை நடத்துவதற்காக—

தாம் வடக்கே செல்வதற்குத் தயார் என்று —

இலங்கையில் உள்ள நான்கு முக்கிய பௌத்த மத பீடங்களில் ஒன்றான அமரபுர நிக்காயாவின் செயலாளர் நாயகமான வண. கொட்டுக்கொட தம்மவரஸ தேரர் அறிவித்திருக்கிறார்.

தமது விருப்பத்துக்கு அரசாங்கம் ஆதரவாக இருந்து, அரசின் முத்திரையுடன் சென்றுபேச அனுமதிதந்தால், தாம் விடுதலைப் புலிகளுடன் பேச முடியும் என்று வண. தம்மவரஸ தேரர் கூறியுள்ளார்.

பௌத்த தேரரின் இந்த அறிவித்தலை அரச தரப்பு பெரிதாகப் பொருட்படுத்தி அதற்கான அனுமதியை வழங்கும் என்று நம்புவதற்கில்லை; எதிர்பார்ப்பதற்கில்லை.

ஏனெனில் போரை நிறுத்தி விடுதலைப்புலிகளுடன் பேசும் மனநிலையில் அரசு இல்லை என்றே அதன் ஒவ்வொரு செயற்பாடும் காட்டுகிறது. மேலும் பௌத்த தேரர் ஒருவரைத் தனது பிரதிநிதியாக விடுதலைப் புலிகளுடன் பேசுவதற்கு அரசு ஒப்புமா?

விடுதலைப் புலிகள் ஆயுதங்களைக் கையளித்தால் மட்டுமே அரசாங்கம் அவர்களுடன் பேச முடியும் என்று சிரேஷ்ட அமைச்சர்கள் அடிக்கடி கூறி வருகிறார்கள்.

கடந்த வாரத்தில் கூட, பாதுகாப்பு பிரதி அமைச்சர் அனுருத்த ரத்வத்தையும், அரசமைப்பு விவகார அமைச்சர் ஜி. எல். பீரிஸூம் இதனை மிக அழுத்தம் திருத்தமாகக் கூறியிருக்கிறார்கள்.

எனவே, வண. கொட்டுக்கொட தம்மவரஸ தேரர் அரச பிரதிநிதியாக விடுதலைப் புலிகளுடன் பேசுவதற்கான சாத்தியம் சிறிதளவேனும் இல்லை எனலாம்.

தேரர் அவர்கள் நல்லெண்ணத் தூதுவராகச் சென்று விடுதலைப் புலிகளுடன் பேசலாம் என்று தானும் இப்போதைய நிலையில் அரசு கூறமாட்டாது.

இதற்கு முன்னரும் இனப் பிரச்சினை விவகாரத்தில் கிறிஸ்தவ மதகுருமார்களும், பௌத்த மதகுருமார்களும் நல்லெண்ணத் தூதுக்குழுக்களில் அங்கம் வகித்து வந்தது உண்டு, ஆனால் இப்போது அதுவும் சாத்தியமில்லை.

காலத்துக்குக் காலம் நல்லெண்ணத் தூது, சமாதானத்தை உருவாக்கும் முயற்சி என்று பல தரப்பினரும் கூறியபோதிலும் எதுவுமே உருப்படியாகக் கை கூடியதாக இல்லை.

சமாதானத்துக்கான முயற்சிகள் வெற்றி அளிப்பதற்கு முதலில் போர் நிறுத்தம் அத்தியாவசியம். அதன் பின்னர் பேச்சுக்கள் குறித்துச் சிந்திப்பதே உகந்தது.

போர் நடக்கும் போதே சமாதானப் பேச்சுக்கள் நடைபெற்று தீர்வு ஒப்பந்தங்களும் கைச்சாத்திடப்பட்ட பல உதாரணங்கள் உண்டு என்பது உண்மைதான்.

ஆனால் அரசு போரை முன்னெடுப்பதில் தீவிர கவனம் செலுத்தும் போது — பேச்சு வார்த்தைகளை விடப் புலிகளை அழிப்பதிலேயே அதிக அக்கறையாக இருப்பதாகக் கூறிக் கொள்ளும் போது—

பேச்சுக்களுக்கு முன் நிபந்தனை விதிக்கும் போது —

போரின் போது பேச்சு ஒரு போதும் இலங்கையில் வெற்றி அளிக்க வாய்ப்பில்லை.

இது காலத்தை வீணடிக்கவும், பதவியை நிலைப்படுத்தவுமே உதவும்.

# 20,000 புசல் விதை நெல் கப்பலில் வருகின்றது!

### உரம், செவ்விளநீர்க் கன்றுகளும் மாஹோவில்

யாழ்ப்பாணம், ஒக். 14

குடாநாட்டு விவசாயிகளுக்குத் தேவையான 20 ஆயிரம் புசல் விதை நெல் மற்றும் ஆயிரம் மெற்றிக்தொன் அமோனியம் சல்பேட் உரம் ஆகியவற்றுடன் ''மாஹோ'' கப்பல் இவ்வாரம் காங்கேசன் துறைக்கு வரவிருக்கிறது.

விதைத்து சுமார் 3 அல்லது மூன்றரை மாதங்களில் பயன் தரக்கூடிய இனமான இந்த விதை நெல் விதைப்பதற்குத் தயாராக நிலத்தை வைத்திருக்கும் விவசாயிகளுக்கு கமநல சேவை நிலையங்கள் ஊடாக வழங்கப்படும் என்றும் —

வலிகாமம் பகுதிக்கு முன்னுரிமை வழங்கப்படும் என்றும் —

ஏற்கனவே விதைத்தவர்களுக்கு விதை நெல் வழங்கப்படமாட்டாது என்றும் —

யாழ். அரச அதிபர் திரு. செ. பத்மநாதன் தெரிவித்தார்.

இந்த விதை நெல் உலக விவசாய நிறுவனத்தின் நன்கொடையுடன் கொள்வனவு செய்யப்பட்டுள்ளதால் விவசாயிகளிடம் இருந்து சேவைக் கட்டணமாக புசலுக்கு 100 ரூபா பெறப்படும் என்றும் அரச அதிபர் தெரிவித்தார்.

அடுத்த தொகுதியாக கப்பல் மூலம் கொண்டு வரப்படும் 15 ஆயிரம் புசல் விதை நெல் அம்பன், குடத்தனை பகுதி விவசாயிகளுக்கும், ஏற்கனவே விதை நெல் பெறாத

(6 ஆம் பக்கம் பார்க்க)

## அரசின் போக்குக் குறித்து ஈ.பி.டி.பி., புளொட் விசனம்

தமிழ் அமைப்புக்கள் தொடர்பாக அரசின் அணுகுமுறை குறித்து ஈ.பி.டி.பியும், புளொட்டும் அதிருப்தி தெரிவித்திருக்கின்றன.

திருமலையில் கடந்த சில தினங்களாக இடம்பெற்று வந்த சம்பவங்கள் தொடர்பாக, இந்த இரு அமைப்புகளும் கூட்டாக விடுத்த அறிக்கையிலேயே மேற்படி அணுகுமுறை குறித்து அவை விசனம் தெரிவித்திருக்கின்றன. அந்த அறிக்கையின் சுருக்கம் வருமாறு:-

இன்றைய யுத்தம் புலிகளுக்கு எதிரானது என்று அரசு கூறுகின்றது. தமிழ் மக்களை விடுவிப்பதற்கான யுத்தம் என்றும் கூறப்படுகிறது.

ஆனால் நடைமுறையில் நாம் காணும் அணுகு முறைகள் தமிழ் மக்களையும். அவர்களது ஜனநாயக அரசியல் கட்சிகளையும் தேசிய நீரோட்டத்தில் ஆர்வத்துடன் கலந்து கொள்ள வைப்பவைபாக இல்லை.

ஜனநாயகக் கட்டமைப்புக்கள் பலமானவையாகவும், நம்பிக்கை தருபவையாகவும் அமைந்திருந்தால் மாத்திரமே மக்கள் வேறு வழியில் நம்பிக்கை கொள்ளாமல் இருக்க முடியும்.

தமிழ் அமைப்புக்கள் தொடர்பான சமீபகால அணுகுமுறைகள் அவை ஜனநாயகப் பாதைக்கு திரும்பியதை அவமதிக்கும் வகையில் அமைந்துள்ளன —என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

(உ-3)

### போலியோ தடுப்பு மருந்து தினம்:

## யுத்தநிறுத்த வேளையில் புலி ஒருவர் சுட்டுக்கொலை

### அந்த அமைப்பு அறிவிப்பு

வலி, தெ. மேற்கு. ஒக். 14

கொக்குவில் பகுதியில் பதுங்கியிருந்து இராணுவத்தினர் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததில் விடுதலைப் புலிகள் அமைப்பைச் சேர்ந்த ஒருவர் மரணமானார்

இத்தகவலை விடுதலைப் புலிகள் நேற்று முன்தினம் மாலை காரில் இணைக்கப்பட்ட ஒலிபெருக்கியில் அறிவித்தனர்.

வலிகாமத்தில் இராணுவக் கட்டுப்பாட்டில் இல்லாத பிரதேசத்தில் இந்த அறிவிப்பு விடுக்கப்பட்டதாக தெரியவந்தது.

போலியோ சொட்டு மருந்து தடுப்புத் தினத்தை ஒட்டி தமது அமைப்பு யுத்த நிறுத்தம் செய்திருந்த வேளையில் அரச படையினர் தம்மீது தாக்குதலை மேற்கொண்டனர் என்று அந்த அறிவிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டது.

(உ-145)

## பட்டலந்த வதை முகாமுக்கு ரணில் அடிக்கடி வந்தார்

### ஆணைக்குழு முன் சாட்சியம்

கொழும்பு, ஒக். 14

தற்போதைய ஐ. தே. கட்சி தலைவரும் முன்னைய அரசில் பிரதமர் பதவியை வகித்தவருமான ரணில்விக்கிரமசிங்கா பட்டலந்த வதை முகாமுக்கு அடிக்கடி விஜயம் செய்ததைத்தான் அவதானித்ததாக பட்டலந்த வதை முகாம் தொடர்பான விசாரணை ஆணைக்குழுவின் முன்னிலையில் சாட்சியமளித்த நந்தன வீரரத்தின என்பவர் தெரிவித்தார்.

ராவய, யுக்திய ஆகிய சிங்கள வார இதழ்களின் ஆசிரியர் குழுவில் பணியாற்றிய நந்தன வீரரத்தின தற்போது பி.பி.சி உலக சேவையின் சிங்களப் பிரிவில் பணிபுரிகிறார்.

இவர் தனது சாட்சியத்தில் மேலும் தெரிவித்ததாவது :-

கடந்த அரசின் ஆட்சிக்காலத்தில்—ஜே,வி.பி.கிளர்ச்சிக் காலத்தில் — நாட்டின் பல பாகங்களிலும் சுமார் மூவாயிரம் சடலங்களைத் தாம் கண்டதாகவும்,இவற்றில் கம்பஹா மாவட்டத்தில் மட்டும் சுமார் இ[illegible]டாயிர[illegible] களைக் கண்டதாகவும் அவர் தெரிவித்தார்.

பல இளைஞர்கள் கண்கள் கட்டப்பட்டு வானில் 'பட்டலந்த' வதை முகாமுக்குக் கொண்டு செல்லப்பட்டதைத் தான் கண்டதாக அவர் கூறினார்.

அந்தக் காலகட்டம் பத்திரிகையாளர்களுக்கு ஆபத்து நிறைந்த ஒன்றாக இருந்தது எனவும் அக்கால கட்டத்திலேயே பிரபல பத்திரிகையாளராக விளங்கிய றிச்சாட் டி சொய்ஸா கொல்லப்பட்டார் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (ஆ-10)

**நாளை**

புரட்டாதி 29
செவ்வாய்க்கிழமை
திதி: திருதியை
முன்னிரவு 7. 00 வரை,
நட்சத்திரம்: விசாகம்
பிற்பகல் 5. 18 வரை.
கரி நாள்
ராகுகாலம்: 3.02—4.32
சுபநேரம்: 10.32—12.02
([illegible])

## இந்தியா வெற்றி!

புதுடில்லி, ஒக். 14

புதுடில்லியில் ஆஸ்திரேலிய அணிக்கு எதிராக நடைபெற்ற கிரிக்கெட் டெஸ்ட் போட்டியில் — ஐந்து நாள் ஆட்டத்தில் ஒரு நாள் முன்னிதாகவே — 7 விக்கெட்டுகளால் இந்தியா வெற்றியீட்டியது

ஓட்ட விவரங்கள் வருமாறு:-

★ ஆஸ்திரேலியா :- முதலாவது இன்னிங்ஸ் — 182 ஓட்டங்கள், இரண்டாவது இன்னிங்ஸ்— 234 ஓட்டங்கள்.

★ இந்தியா:- முதலாவது இன்னிங்ஸ் 361 ஓட்டங்கள்— இரண்டாவது இன்னிங்ஸ் 3 விக்கெட் இழப்புக்கு 58 ஓட்டங்கள்.

இந்திய டெஸ்ட் அணிக்கு தாம் தலைமைதாங்கிய முதல் ஆட்டத்திலேயே வெற்றியைத் தேடிக் கொடுத்திருக்கின்றார் கப்டன் சச்சின் டெண்டுல்கார் என்பது குறிப்பிடத்தக்கது.

(உ-3)

## வெளிவாரி மாணவருக்கு பரீட்சையை இங்கே நடத்துக!

பேராதனைப் பல்கலைக்கழக வெளிவாரிப் பட்டப் படிப்புப் பரீட்சைகள் யாழ். நகரில் நடத்த ஏற்பாடு செய்து தரும் வண்ணம் யாழ். அரச அதிபரையும், மற்றும் சம்பந்தப்பட்ட கல்வி அதிகாரிகளையும், எம்மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களையும் கேட்டுக் கொள்கிறேன்.

**வாசகர் திருமுகம்**

மேலும் இப்பரீட்சை சில ஆண்டுகளுக்கு முன்னர் யாழ்ப்பாணத்தில் நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது இப் பரீட்சையை யாழ். நகரில் நடாத்துவதன் மூலம் பல மாணவருக்கு ஏற்படும் போக்குவரத்து வசதியின்மையையும், செலவினங்களை குறைக்கவும், பரீட்சையை சிறந்த முறையில் எழுதுவதற்கும் உகந்ததாக இருக்கும்.

குடாநாட்டு மாணவர்கள் கண்டிக்குப்போய் வருவது இப்போதுள்ள சூழ்நிலையில் பாதுகாப்பில்லை என்பதையும் கவனத்திற் கொள்ள வேண்டும்.

எனவே இப்பரீட்சை இங்கு நடத்துவதற்கு ஏற்பாடு செய்து உதவுமாறு என்னைப்போன்ற மாணவர்களின் சார்பில் தயவுடன் கேட்டுக் கொள்கிறேன்.

இப் பரீட்சை இன்னும் ஒன்றரை மாத காலத்தில் — எதிர்வரும் டிசம்பரில் — நடைபெறவுள்ளதால் இப்போதே இது விடயத்தில். உடன் நடவடிக்கை அவசியம். கடைசி நேரத்தில், முயன்றோம் சரிவரலில்லை என்று சொல்லித் தப்பிக்கொள்ள அதிகாரிகள் காத்திருக்கக்கூடாது.

S. சாந்தினி

கருகம்பனை.

## பள்ளம் வருமுன்னர் தடுக்க வேண்டிய விவகாரம்

சாவகச்சேரி இந்துக் கல்லூரி விளையாட்டு மைதானம் பழுதாக்கப்பட்டது குறித்து ''வாசகர் திருமுகம்'' பகுதியில் ஓர் அன்பர் கவலை தெரிவித்திருந்தார்,

அந்த நிலைமை யாழ். மத்திய கல்லூரி விளையாட்டு மைதானத்துக்கும் ஏற்பட்டு விடாமல் தடுக்க வேண்டிய தேவை மிக அவசியமாகவும், அவசரமாகவும் தோன்றியுள்ளது.

யாழ். மத்திய கல்லூரி விளையாட்டு மைதானம் குடா நாட்டின் விசாலமான, சிறந்த பிரசித்தி பெற்ற மைதானங்களில் ஒன்று.

மெய்வல்லுநர் போட்டிகள் பலவும் இங்கேயே நடத்தப்படுவது வழக்கம். ஆனால் அந்த நிலைமையும், தரமும் தொடர்ந்து நீடிக்குமா என்று கவலையுடன் கேட்க வேண்டியுள்ளது

விளையாட்டு மைதானத்திற்குள் லொறிகளும், பஸ்களும் (பயணிகளுடன்) தாராளமாக அடிக்கடி ஓடுவதால் அதன் சீரான நிலமட்டம் பள்ளம் விழுகிறது.

மைதானத்தின் மேற்குப் பகுதியில் இலேசாக வெள்ளம் நிற்கத் தொடங்கி விட்டது!

ஏற்கனவே, உதைபந்தாட்ட விளையாட்டுப் பகுதியின் ஒரு பக்கக் ''கோல்'' கம்பப் பகுதியில் வெள்ளம் நிற்பதுண்டு. இப்போதைய வாகன ஓட்டத்தால் அடுத்த பக்க ''கோல்'' கம்பமும் வெள்ளத்திற்குள் அகப்படும் ஆபத்து உண்டு.

கிரிக்கெட் விளையாட்டுக்கு மிகச் சீரான நில மட்டம் அவசியம். போகும் போக்கில் கிரிக்கெட் மைதானத்தைச் சீர் செய்வதற்கே பெருந் தொகைப் பணம் செலவாகப் போகிறது.

முன்பெல்லாம், மைதானத்திற்குள் மாணவர்கள் சைக்கிள் ஓடினாலே, அவர்களைக் கண்டிக்கும் எங்கள் பாடசாலையின் பழைய மாணவர்கள், இப்போது கண்டும் காணாதது போல இருப்பது ஏன்?

விளையாட்டு ரசிகர்கள் அபிமானிகளையும் இது குறித்துக் கவனம் எடுக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

மழை காலம் வந்து விட்டது.

வெள்ளம் வருமுன் அணைகட்ட வேண்டும். அதே போன்று பள்ளம் வருமுன் தடுத்துத் தீர்க்க வேண்டியது மத்தியின் விளையாட்டு மைதான விவகாரம்.

தி. நடனசபேசன்
(யாழ். மத்திய கல்லூரி)

பி. ஏ. தம்பி லேன்,
வண்ணார்பண்ணை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சங்கானை வைத்தியசாலையில் வைத்தியர், தாதியர் பற்றாக்குறை

வலி. தென்மேற்கு, ஒக். 14

சங்கானை அரசினர் வைத்தியசாலையில் இரு வைத்தியர்கள் மட்டுமே பணிபுரிகின்றனர். தாதி உத்தியோகத்தர் ஒருவர் மட்டுமே சேவை ஆற்றுகிறார். வலிகாமம் தென் மேற்குப் பகுதி நோயாளர்களின் தேவைகளை இந்த வைத்தியசாலை ஓரளவுக்கு பூர்த்தி செய்கின்றபோதிலும் இத்தகைய குறைபாடுகளும் இருக்கத்தான் செய்கின்றன.

சங்கானை அரசினர் வைத்தியசாலையில் பணிபுரியும் வைத்திய அதிகாரி டாக்டர் அருமைத்துரை ''உதயன்'' செய்தியாளரிடம் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஆண் — பெண் சிகிச்சைக் களங்கள், குழந்தைகளுக்கான சிகிச்சைக் கவம், பிரசவ சிகிச்சைக்களம் ஆகியவை இங்கு இயங்குகின்றன.

வலி. தென் மேற்குப் பகுதியில் உள்ள அரசாங்க வைத்தியசாலைகளில் இந்த வைத்தியசாலையில் மட்டுமே உள் நோயாளர்கள் சிகிச்சைக்கென அனுமதிக்கப்படுகின்றார்கள்.

இரவு, பகலாக இந்த வைத்தியசாலை செயற்படுகின்றது. இரவு வேளையிலும் நோயாளர்கள் வந்து சிகிச்சை பெறுகின்றனர்.

நெருப்புக் காய்ச்சல், மலேரியா நோய்களினால் பீடிக்கப்பட்ட நோயாளர்களின் எண்ணிக்கை அதிகமாகியுள்ளது.

நாளாந்தம் வெளி நோயாளர் பிரிவில் சுமார் 300பேர் வந்து சிகிச்சை பெற்றுச் செல்கின்றனர். 65 பேர் சிகிச்சைக் களங்களில் சிகிச்சை பெறுகின்றனர்.

சலரோக, கர்ப்பிணித்தாய்மார் கிளினிக், குழந்தைகள் கிளினிக், மூட்டுவாத சிகிச்சை ஆகியவை நடைபெறுகின்றன. இவற்றுடன் பற்சிகிச்சையும் நடைபெறுகின்றது.

இந்த வைத்தியசாலையில் மருந்துப் பொருள்களுக்கு பற்றாக்குறை நீடிக்கின்றது. டிஸ்ரில் வாட்டர் இல்லை. ''சேலைன்'' ஏற்றுவதற்கு உபயோகிக்கும் (வயர்) ஐ.வி. செற் பற்றாக்குறையாக உள்ளது.

வைத்தியசாலைக்குச் செல்லும் பாதை சீரழிந்திருப்பதால் போக்குவரத்துக் கஷ்டம் உள்ளது.

—இவ்வாறு அவர் கூறினார். (இ-145)

## கொழும்பில்தொலை..

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

யில் தேசிய புலனாய்வுப் பிரிவினர் ஈடுபட்டிருக்கின்றனர் எனக் கருதப்படுகின்றது.

தொலைபேசி ஒற்றுக் கேட்கப்படுவதை தனியாரின் அந்தரங்க உரிமை மற்றும் ஜனநாயக சுதந்திரம் ஆகியவற்றை அப்பட்டமாக மீறும் ஒரு செயலாகவே கருதப்படுகின்றது.

தேசியப் பாதுகாப்பை முன்னிட்டே இத்தகைய நடவடிக்கை எடுக்கப்படுவதாக அரசு சமாதானம் சொன்னாலும் பெரும்பாலும் கட்சி அரசியல் மற்றும் சுயலாபம் ஆகியவை கருதியே இத்தகைய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

இவ்வாறு அந்தப் பத்திரிகைச் செய்தி மேலும் தெரிவித்தது. (உ)

## சர்வதேச..

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

தொடர்பு கொண்டு பேசுவதற்கும்—

தமக்குத் தேவையான பணத்தைப் பெறுவதற்காகவுமே—

பெரும் எண்ணிக்கையிலான மக்கள் கொழும்பு செல்வதற்கு கப்பல் பயணத்துக்கும், விமானப்பயணத்துக்கும் விண்ணப்பிக்கிறார்கள் என்று —

பிரதி அமைச்சரிடம் எடுத்துச் சொல்லப்பட்டது.

சர்வதேச தொலைபேசித் தொலைத் தொடர்பையும், வெளிநாட்டுப் பணத்தை வங்கிகள் ஊடாக பெறுவதற்கான வசதிகளையும் செய்தால், கொழும்பு செல்வோரின் எண்ணிக்கை குறையும் என்று பிரதி அமைச்சருக்கு எடுத்துக் கூறப்பட்டது.

அதனைத் தொடர்ந்து மேற்கூறிய இரண்டு வசதிகளையும் செய்வதற்கு உடனடியாக ஏற்பாடு செய்யுமாறு பிரதி அமைச்சர் ரத்வத்தை தொலைத் தொடர்புப் பகுதி மற்றும் வங்கிகளின் உயரதிகாரிகளுக்கு மாநாட்டில் வைத்து உத்தரவிட்டார். (அ-3)

## 20,000 புசல்..

(5 ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஏனைய விவசாயிகளுக்கும் வழங்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

அதேவேளை—''மாஹோ'' கப்பலில் ஆயிரத்து 500 செவ்விளநீர் தென்னங் கன்றுகளும் எடுத்து வரப்படவிருப்பதாகத் தெரியவருகின்றது. (உ-3)

## பயணிகள் கப்பல் புறப்பாடு

திருகோணமலை, ஒக். 14

திருகோணமலையிலிருந்து பயணிகளை ஏற்றிக்கொண்டு கப்பல்கள் வடக்கு நோக்கி நேற்றுப் புறப்பட இருந்ததாக திருகோணமலை பட்டணமும் சூழலும் பகுதிக்கான பிரதேச செயலர் திரு. வேலும்மயிலும் தெரிவித்தார். (உ-3)

## சென்னை..

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

வேட்பாளர் சந்திரலேகா இரண்டாவது இடத்தையும் —

மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக்கழக வேட்பாளரும், ஹாஸ்ய நடிகருமான எஸ், எஸ் சந்திரன் மூன்றாம் இடத்தையும் பெறுவர் என தேர்தல் கணிப்பீடுகள் தெரிவித்தன.

உள்ளாட்சித் தேர்தல் முடிவுகளில் பெரும்பாலும் தி.மு.க. — தமிழ் மாநில காங்கிரஸ் கூட்டணி வெற்றி பெற்றாலும், இவ்வருட முற்பகுதியில் நடந்த சட்டமன்ற, நாடாளுமன்றத் தேர்தல்களில் கிடைத்தது போன்ற அமோக வெற்றி இக்கூட்டணிக்குக் கிடைக்காது என்றும் —

அதேபோல அ.தி.மு.க. கடந்த பொதுத் தேர்தலில் சந்தித்தது போன்ற பெருந் தோல்வியை இத்தேர்தலில் எதிர்கொள்ளாது என்றும் —

அக்கணிப்பீடுகள் மேலும் தெரிவித்தன. (உ)

## காங்கேசனில் இறங்குதுறை

கொழும்பு, ஒக். 14

காங்கேசன்துறையில் புதிய இறங்குதுறை ஒன்று அமைக்கப்படவிருப்பதாக அரசாங்கம் அறிவித்துள்ளது.

இந்த இறங்குதுறை பிரிட்டிஷ் அரசின் உதவியுடன் நிர்மாணிக்கப்படவிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது. (உ-3)

## பாதுகாப்பு..

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

தொகை வருமாறு:-

★ இராணுவம் — 406 கோடி 65 இலட்சம் ரூபா.

★ கடற்படை — 251 கோடி 5 இலட்சம் ரூபா.

★ விமானப்படை — 370 கோடி ரூபா.

★ பொலீஸ் — 17 கோடி 30 இலட்சம் ரூபா.

★ பாதுகாப்பு அமைச்சு — 15 கோடி ரூபா.

பாதுகாப்புப் படைக்குத் தேவையான அனைத்து ஆயுதங்களையும் வசதிகளையும் வழங்குவதற்குத் தேவையான நிதியை அரசு செலவிடுவதாக பாதுகாப்புப் பிரதி அமைச்சர் ஜெனரல் அனுருத்த ரத்வத்தையும், பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் சந்திரானந்த டி சில்வாவும் தெரிவித்தனர்.

ஐக்கிய தேசியக் கட்சியின் ஆட்சியில் வருடம் ஒன்றில் ஆகக் கூடியது இரண்டாயிரத்து ஐநூறு கோடி ரூபாவே பாதுகாப்புக்கு செலவிடப்பட்டது.

ஆனால் புதிய அரசு பதவியேற்று இரண்டு வருட காலத்துக்குள் இச் செலவு இருமடங்காக அதிகரிக்கப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது. (உ-3)

## கொழும்பு செல்...

(1 ஆம் பக்கத்தொடர்ச்சி)

துள்ள பிரதேசத்திலிருந்து மக்கள் பெருமளவில் வெளியேறி மீண்டும் அந்த இடங்களுக்குத்திரும்பாமல்தவிர்த்து வருவது குறித்து சம்பந்தப்பட்ட வட்டாரங்கள் விசனம் அடைந்திருப்பதாகவும் —

இதனால் குடாநாட்டு மக்கள் கொழும்பு மற்றும் பிற இடங்களுக்குத் தொடர்ந்து செல்வதற்கான வாய்ப்பு, வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பதில் அந்தவட்டாரங்கள் அசமந்தப் போக்கைக் கடைப்பிடிப்பதாகவும் —

மேலும் தெரிவிக்கப்பட்டது. (உ-3)

# ராணுவத்துக்கு ஆள் திரட்ட நேர்முகப் பரீட்சை

கொழும்பு, ஒக். 14

இலங்கை இராணுவ தொண்டர் படைக்கு ஆள்களை தெரிவு செய்வதற்கான நேர்முகப் பரீட்சைகள் தற்சமயம் நடைபெற்று வருகின்றன.

தலுவத்தை, பத்தரமுல்ல, சாளியபுர, சதம்புர, தெகியத்த கண்டி, காலி ஆகிய இடங்களில் உள்ள இராணுவ முகாம்களில் நேர்முகப் பரீட்சைகள் நடைபெறுகின்றன. (இ-3)

# மீன்பிடி உபகரணங்களின் விலை குறையவில்லை

## மீனவர்கள் பெருமளவு பாதிப்பு

வலி-தென்மேற்கு, ஒக். 14

யாழ்.குடாநாட்டில் மீன்பிடி உபகரணங்களின் விலை இன்னமும் குறையவில்லை.

இதனால் மீன்பிடித் தொழிலில் முன்னேற்றம் இல்லாத நிலை ஏற்பட்டுள்ளது என்று கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சமாசத்தைச் சேர்ந்த ஒருவர் தெரிவித்தார்.

வலி.தென்மேற்குப் பகுதியில் காக்கைதீவிலிருந்து அராலித்துறை வரையுள்ள ஆழமற்ற உப்பு நீரேரிப் பகுதிகளில் மட்டுமே மீன் பிடிக்கத் தற்போது அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

பகலில் மட்டுமே வலை கட்டப்படுகின்றது. இரவு மீன்பிடி முற்றாகப் பாதிப்படைந்துள்ளது.

மீன் பிடிப்பதற்குரிய பரப்பளவு போதியளவு இல்லையென்றும் இதனாலேயே மீனுக்குப் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

மீன்பிடி உபகரணங்களை எடுத்து வந்து விநியோகிப்பதற்கு கூட்டுறவு ஸ்தாபனங்களோ அல்லது வேறு நிறுவனங்களோ இதுவரை முன்வரவில்லை—என்றும் அவர் கூறினார். (இ-145)

## கப்பலில் மருந்து

யாழ்ப்பாணம், ஒக் 14

யாழ். மாவட்டத்தில் நிலவும் மருந்துத்தட்டுப்பாட்டை நிவர்த்தி செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

யாழ். போதனா வைத்தியசாலைக்கும், பிராந்திய சுகாதாரத் திணைக்களத்துக்கும் தேவையான — மூன்றாம் காலாண்டுக்கான — மருந்து வகைகளை ''மாஹோ'', ''ரீ யூனியன்'' கப்பல்கள் மூலமாக எடுத்து வர ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

இவ்வாரத்தில் இந்தமருந்து வகைகள் வந்து சேரும் என எதிர்பார்க்கப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டது. (உ-3)

## முத்திரை இடப்படாத தராசுகள்

வலி. தென் மேற்கு தனியார் கடைகளிலும், வர்த்தக நிறுவனங்களிலும் நீண்டகாலமாக முத்திரையிடப்படாத தராசு, படிகள் உபயோகத்திலிருந்து வருகின்றன.

குறிப்பாக சந்தைகளில் உபயோகிக்கப்படும் படிக்கற்கள் குறிப்பிட்ட எடைக்கு குறைவானவையாக உள்ளன. (இ-145)

## காணாமற்போன..

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

எடுத்துச் செல்லப்பட்டதாக பிந்திய தகவல்கள் தெரிவித்தன.

இச் சம்பவம் பற்றிச் சொல்லப்படுவதாவது:-

உரும்பிராயில் தமது மாமன், சகோதரனுடன் வசித்து வந்த ரஜினி, கப்பல் மூலம் கொழும்பு செல்வதற்கு ஆயத்தங்கள் செய்திருந்தார்.

செப்ரெம்பர் மாதம் முப்பதாம் திகதி திங்கட்கிழமை, மானிப்பாயில் உள்ள தமது சிறியதாயார் வீட்டுக்குப் பயணம் சொல்வதற்காகச் சென்றார்.

அன்றைய தினம் அவர் வீடு திரும்பவில்லை. போக்குவரத்துப் பிரச்சினை காரணமாக அவர் வீடு திரும்பவில்லை என்றுகருதப்பட்டது. அடுத்த நாளும் வராதது கண்டு அவரது சகோதரன் மானிப்பாய்க்குத் தேடிச் சென்ற போதுதான் அவர் திங்களன்றே மானிப்பாயிலிருந்து திரும்பியவிடயம் தெரியவந்தது.

அதன் பின்னர் பல இடங்களிலும் தேடப்பட்டது. உரும்பிராய், கோண்டாவில் பகுதிகளில் உள்ள இராணுவக் காவல் அரண்களிலும் விசாரிக்கப்பட்டது.

ரஜினி எங்கே? என்ன நடந்தது என்பதற்கான துப்பு எதுவும் பல நாள்களாகக்கிடைக்கவில்லை.

பொலீஸாருக்கு இவ்விடயம் தெரியவந்து அவர்கள் பொலீஸ் நாய்களையும் கொண்டுவந்து தேடினர். கண்டுபிடிக்க முடியவில்லை.

கடந்த வாரம் நல்லெண்ணத்துக்கும் சமாதானத்துக்குமான மக்கள் குழுப் பிரதிநிதிகள் அச்செழுவில் ஸ்ரீலங்கா இராணுவத்தின் 51 ஆவது டிவிஷன் தளபதி மேஜர் ஜெனரல் ஜானக பெரேராவைச் சந்தித்த போதும் இந்த இளம் பெண் காணாமல் போனது குறித்து பிரஸ்தாபிக்கப்பட்டதாக அறியவருகிறது.

இந்த விடயம் இராணுவத்தின் கவனத்துக்குக் கொண்டு வரப்பட்டுள்ளதாகவும்—

காணாமல் போன யுவதியைத் தேடிப் பிடிப்பதிலும், இது சம்பந்தமான விடயத்தில் குற்றம் ஏதும் இழைக்கப்பட்டிருந்தால் பொறுப்பானோருக்கு எதிராகக் கடும் நடவடிக்கை எடுப்பதில் படை உயர் பீடம் மிகத் தீவிரமாக இருப்பதாகவும் —

உயரதிகாரிகள் தரப்பில் தெரிவிக்கப்பட்டதாம்.

இந்தப் பின்னணியில் —

தற்போது யுவதியின் சடலம் கண்டு பிடிக்கப்பட்டிருக்கின்றது.

கோண்டாவில் பஸ் டிப்போவுக்குச் சமீபமாக உள்ள ஒரு வீட்டின் மலசல கூடத்தடியில் வீசிய துர்நாற்றத்தைத் தொடர்ந்து, பொலீஸாருக்கு அறிவிக்கப்பட்டு அவர்களின் உதவியுடன் சடலம் நேற்று முன்தினம் தோண்டி எடுக்கப்பட்டது.

வெற்றிவேலாயுதம் ரஜினி காணாமற் போனது குறித்து பலவித ஊகங்களும், வதந்திகளும் கடந்த சில நாள்களாக நிலவின. எனினும் ஊர்ஜிதமான செய்திகள் வெளியே தெரியவரவில்லை.

இப்போது அவரது சடலம் கொழும்புக்கு எடுத்துச் செல்லப்பட்டிருக்கிறது.

இச் சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேக நபர்கள் காவலில் வைக்கப்பட்டிருப்பதாக ஒரு செய்தி தெரிவித்த போதிலும் அதனை ஊர்ஜிதப்படுத்த முடியவில்லை. (அ-உ-15)


தமிழ் - ஆங்கில தட்டச்சு

மற்றும்

றோணியோ வேலைகளுக்கு

அருண்

361, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.


மரண அறிவித்தல் 2 ஆம் பக்கத்தில்

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிடெட்டினரால் யாழ்ப்பாணம், நாவலர் வீதி, 292/2 இலக்கத்திலுள்ள அவர்களதுபணிமனையில் 14-10-1996 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org